நாள் 04.02.2025

CC 36/2022

எசா 1

பெயர் : ரெஜித்

க/பெ.கிருஷ்ணன்குட்டி

(Petitioner and Respondent present . Both side advocates present)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. நான் கடந்த 14 வருடங்களாக கோகோபித் தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் மற்றும் எதியும் மேற்படி தொழிலைதான் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு ரூபாய் 10 லட்சத்து 50 ஆயிரம் செலுத்த வேண்டியிருந்தது என்று நான் கூறியிருந்த நிலையில் என்ன காரணத்திற்காக செலுத்த வேண்டியிருந்தது என்று என் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் தற்போது நினைவில்லை. கோகோபித்திற்காக புகார்தாரர் எனக்கு மேற்படி தொகையை செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2. எந்த தேதியில் எவ்வளவு டன் கோகோபித் புகார்தாரர் வாங்கினார் என்றும் அதற்கு எவ்வளவு நிலை நிர்ணயிக்கப்பட்டது என்றும் என் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். புகார்தாரர் பைனான்ஸ் தொழில் எதுவும் செய்யவில்லை என்றாலும் அவரும் கோகோபித் தொழில்தான் செய்கிறார் என்றாலும் சரியல்ல. 20.07.2019 தேதியன்று எனது வங்கியில் ஆன்லைன் பிரச்சனை என்று கூறியுள்ள நிலையில் புகார்தாரரை மேற்படி தொகை எதிரியின் வங்கி கணக்கில் எனக்காக செலுத்துவதற்கு நான்தான் அறிவுறுத்தினேன். அதன்பேரில் அவ்வாறு பணம் செலுத்துவதற்காக புகார்தாரர் எழுத்துபூர்வமான சம்மதம் அளிக்கவில்லை.

3. எதிரியின் தென்னை சப்ஸ்டிராக்ஸ் நிறுவன வங்கி கணக்கிற்கு அவ்வாறு பணம் செலுத்தப்பட்டால் அதற்கு எதிரி GST மற்றும் வருமான வரி செலுத்தவேண்டும் என்பது எதிரிக்கு தெரியும். நானும் புகார்தாரரும் கோகோபித் தொழில் மூலம் வரும் லாபத்தை பங்கீடு செய்வதற்கு எழுத்துபூர்வமான ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு என்ன தேதியில் சென்றேன் என்று நினைவில்லை, ஆனால் சென்றேன்.

4. கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னிடமும் எதிரியிடமும் தலா 3 காசோலகைள் கட்டாயப்படுத்தி பெற்றுக்கொண்டார்கள் என்று கூறியுள்ள நிலையில் அவர்களின் மேலதிகாரிகளிடமோ தமிழ்நாடு முதல் அமைச்சர் தனிப்பிரிவிற்கோ புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் மேற்படி விசாரணைக்கு பிறகு நான் என் வசம் இருந்த ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்தபோது அதை படித்துவிட்டு என் மீது தவறு எதுவும் இல்லை என்று தெரிந்துகொண்டார்கள் அதனால் புகார் கொடுக்கவில்லை.

5. மேற்படி காசோலையை போலீசார் என்னிடம் திருப்பிக்கொடுக்கவில்லை. அவை தற்போது புகார்தாரர் வசம் உள்ளது. மேற்படி காசோலைகளை போலீசார் என்னிடம் திருப்பிக்கொடுக்கவில்லை. அவை தற்போது புகார்தாரர் வசம் உள்ளது. மேற்படி காசோலைகளை புகார்தாரரிடம் இருந்து பெற்று போலீசார் என்னிடம் தரவில்லை. புகார்தாரரே தந்துவிடுவார் என்று கூறினார்கள். நான் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் செல்லவில்லை என்றாலும் புகாரின்பேரில் போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றாலும் அங்கு நானும் எதிரியும் போலீசாரிடம் காசோலைகளை தரவில்லை என்றாலும் வழக்கிற்காக எதிரி எனது நண்பர் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எசாஆ 1, 2, 3 ஆவணங்களில் புகார்தாரர் எந்த கையொப்பமும் இடவில்லை என்றாலும் மேற்படி ஆவணங்களுக்கும் புகார்தாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

6. நானும் எனது நண்பரான எதிரியும் சேர்ந்துகொண்டு புகார்தாரரை ஏமாற்றுவதற்காக நான் இந்த வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது)

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.